REGD POST

# கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

தமிழ்நாடு,சென்னை-35.

*****

முன்னிலை: திரு.தி.ந.வெங்கடேஷ்,இ.ஆ.ப.

ந.க.எண்.20608சி1/2018 நாள்: 18.08.2021.

014041

பொருள்: பணியமைப்பு- கருவூலக் கணக்குத் துறை - திரு L.அறிவுக்கரசு, இளநிலை உதவியாளர், திருச்சி மாவட்ட கருவூல அலகு - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடல்

பார்வை:

1. திருச்சி மாவட்டக் கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.25259/2015/ஆ2 நாள். 15.05.2017
2. திருச்சி மாவட்டக் கருவூல அலுவலர், அவர்களின் கடித ந.க. எண். 25259/ 2015/ ஆ2 நாள். 18.05.2018
3. கருவூலக்கணக்கு ஆணையரக கடித ந.க. எண்20608/சி1/2018, நாள். 12.07.2019, 02.12.2019, 10.03.2021, மற்றும் 27.04.2021.
4. அரசு கடித எண். 33459/நிதி (க.க.2)/2021, நாள்.25.05.2021

*******

திருச்சி மாவட்டக் கருவூல அலகில் திருச்சி சார்நிலை கருவூலத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய திரு. Y.லூர்து ராஜரீகம் அவர்கள் 31.01.2014 அன்று பணியிலிருக்கும்போது மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமாகிய திரு L.அறிவுக்கரசு அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு பார்வை-1ல் காணும் செயல்முறை ஆணைப்படி 16.05.2017 முற்பகல் முதல் திருச்சி மாவட்ட கருவூல அலகில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

2...

தனியரின் பணிவரன்முறை செய்ய பார்வை-2-இல் காணும் கருவூல அலுவலர், திருச்சி அவர்களின் கருத்துரு இவ்வாணையரகத்தில் பெறப்பட்டது தனியரின் பணியினை வரன்முறை செய்தல் தொடர்பாக, பார்வை-4ல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவித்தவாறு அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1)துறை, நாள்.26.02.2021-ல் பத்தி 5-ல் உள்ள (5.1),(5.2)-ல் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higer than the appointing authority),அவரவர் கட்டுப்பட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings)வெளியிடலாம் எனத்தெரிவிக்கப்பட்டது.

பார்வை-1-இல் காணும் செயல்முறை ஆணையில்,திரு.L.அறிவுக்கரசு (காலஞ்சென்றதிரு.Y.லூர்து ராஜரீகம், இளநிலை உதவியாளர் திருச்சி மாவட்டக்கருவூல அலகு அவர்களின் மகன்) கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார் மேலும் அச்செயல்முறையின்படி தனியர் திருச்சி மாவட்டக்கருவூல அலகிற்கு இளநிலை உதவியாளராக 16.05.2017 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டார்.

பார்வை-2-இல் காணும் திருச்சி மாவட்டக்கருவூல அலகு கருவூல அலுவலர் அவர்களின் கருத்துருவை பரிசீலித்து, பார்வை-4-இல் காணும் அரசுக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளநிபந்தனைகளுக்குட்பட்டு,இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திரு. L.அறிவுக்கரசு இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும்படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான பணிநியமனம் மற்றும் அப்பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும்,திரு.L.அறிவுக்கரசு அவர்களின் பணியினை தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் பிரிவு -28-இன்

உட்பிரிவு (1)-ன்படி தனியர் பணியேற்ற நாளான 16.05.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர்பொருட்டு தமிழ்நாடு கருவூலக்கணக்குத்துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் என ஆணையிடப்படுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார். மேலும் பணிவரன்முறைஆனது பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும்

தி.ந. வெங்கடேஷ்
கருவூலக் கணக்கு ஆணையர்.

பெறுநர்:

1. திரு L.அறிவுக்கரசு,
   இளநிலை உதவியாளர்,
   மாவட்டக்கருவூலம்,
   திருச்சி.
   (உரிய அலுவலர் மூலமாக)

2. கருவூல அலுவலர்,
   மாவட்டக்கருவூலம்,
   திருச்சி.
3. இருப்புக்கோப்பு.
4. உதிரி

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்
28/8/2021.

19/8/2021